IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.243/2008
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.55 p.m.

பி.வா.சா.1 சாட்சி சிங்கராஜ் த.பெ.வேலுநாயக்கர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 30.03.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. 2008 ஜனவரியில் பாகம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. மேற்படி பாகத்தில் தாவாச் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் எனது மனைவிக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்தது பாகத்தில் எனக்கு கிடைத்த சொத்தா என்றால் பாகத்தில் கிடைத்த சொத்துதான். நான் எனது மனைவிக்கு 06.02.2008ல் எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. எனது மனைவி தாவா வழக்கில் 11வது பிரதிவாதி என்றால் சரிதான். எனது மனைவிக்கு எதிராக ஒருதலைபட்சமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2008ல் பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கு ஆதரவாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா வழக்கில் எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி எதிர்வாதம் 20.08.2008ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்படி எதிர்வாதத்தில் பாகப்பிரிவினை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி எதிர்வாதத்தில் பாகம் பிரிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. செட்டிக்குளத்தில் எனக்கு பூர்வீக இடம் உள்ளதா என்றால் இல்லை, சூர்யா என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தேன். வா.சா.ஆ.1 ஆவணம் வாய்கிரலாக பிரிக்கப்பட்டு எனக்கு தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

4. எனது உடன்பிறந்தவர்களான 2முதல் 10 பிரதிவாதிகள் அவரவர் பாகத்தை விற்பனை செய்துள்ளார்களா என்றால் விற்பனை செய்துள்ளார்கள். இவ்வழக்கில் அவர்கள் ஆஜராகவில்லை என்றால் சரிதான். எனக்கும், எனது உடன்பிறந்த சகோதரர்களுக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் 2008ல்தான் பாகம் ஏற்பட்டது என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. வாதியின் கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபணம் செய்ய நிபுணர் ஆய்விற்கு அனுப்பப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி நிபுணர் தாக்கல் செய்த அறிக்கையில் எனது கையெழுத்தினை ஒப்பீட்டு வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து மற்றும் வா.சா.ஆ.3, 5ல் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான் என்று உறுதி செய்யப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி கையெழுத்து நிபுணரின் அறிக்கைக்கு எனது தரப்பில் எவ்வித ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாது.

6. 12வது பிரதிவாதியை தெரியுமா என்றால் தெரியும். அவர் எப்போது கிரையம் வாங்கியுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கு நிலுவையில் உள்ளபோது அவர் கிரையம் வாங்கியுள்ளார்

என்றால் எனக்கு தெரியாது. இவ்வழக்கில் 12ம்பிரதிவாதியை விசாரணை செய்ய உள்ளேனா என்றால் தெரியாது.

7. மேற்படி கிரையம் உண்மையானது அல்ல என்றால் சரியல்ல. 2005ல் வாதிக்கு நான் சொத்தை கிரையம் செய்வதற்காக ரூ.26,607/–க்கு கிரையம்பேசி கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பாகவே ரூ.14,000/– வாங்கினேன் என்றால் சரியல்ல.

8.வா.சா.ஆ.1 ஏற்பட்ட காலத்தில் ரூ.5000/– வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. மேற்படி காலக்கட்டத்தில் தனிப்பட்டா யாருக்கும் ஏற்படவில்லை என்றும், தனிப்பட்டா என்பெயருக்கு வாங்கி கிரையம் செய்து கொடுக்கிறேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. எனது பெயருக்கு பட்டா எப்போது ஏற்பட்டது என்றால் எனது பெயருக்கு மாறவில்லை.

9. தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் 12ம்பிரதிவாதி கௌதம் பெயரில் உள்ளது. பட்டா மாறிய விபரத்தை வாதிக்கு தெரிவிக்கவில்லை என்றால் தெரியாது. மேற்படி வா.சா.ஆ.1ல் மேற்கண்ட நிபந்தனை விதித்ததால் காலக்கெடு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக வாதி அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார்.

10. இணைப்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு பிறகுதான் எனது மனைவி பெயரில் போலியாக ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிக்கு சிக்கல்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில்தான் 12ம் பிரதிவாதிக்கு போலியாக ஆவணத்தை எழுதிக்கொடுத்தேன் என்றால்

சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:1.25p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில் கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.01 14:31:37 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.